செ.வெ.எண்: 272 நாள்: 27.05.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆன்லைன் வகுப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

----------------------------------------------------------------------------------------------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆன்லைன் வகுப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பாக கல்வித்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.05.2021) ஆட்சியரகத்தில் நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் ஆன்லைன் வகுப்புகளை எவ்வாறு கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்துதல் குறித்து மாவட்ட அளவிலான கல்வித்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 342 பள்ளிகளில் பயிலும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு ஆன்லைன் வகுப்பினை ஆசிரியர்கள் அவர்களது வீடுகளில் இருந்து நடத்தி வருகின்றனர். இந்த ஆன்லைன் வகுப்புகளை பள்ளிகளில் உள்ள பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி தினமும் நடைபெறும் ஆன்லைன் வகுப்புகள் முழுவதும் பதிவு செய்யப்பட்டு, இப்பதிவுகள் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் கண்காணிக்கப்படுவதுடன்,

இக்குழுவில் மாணாக்கர்களின் சார்பில் 2 மாணவியர்களை கண்டிப்பாக சேர்த்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் ஆன்லைன் வகுப்புகள் நடைபெறும் பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்கள், ஆன்லைன் வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் குறித்த விபரங்களை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலருக்கு தெரியப்படுத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆன்லைன் வகுப்புகள் குறித்த சந்தேகங்கள், விபரங்கள், கருத்துக்கள் மற்றும் புகார்கள் தெரிவிக்க மாணவர்களுக்கு உதவிடும் வகையில் 04322-222180 என்ற மாவட்ட முதன்மை கல்வி அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜயலட்சுமி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**